Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No.176/ 2019

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.2**

| Name : | பவன்குமார் | Calling: | இந்தியன் வங்கி உதவி மேலாளர் |
|---|---|---|---|
| Father's Name | சீனிவாசன் | Religion: | இந்து |
| Village: | | Age: | 31 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 17.03.2022.

SIGN :

STC.No. 176/2019 ம.த.சா.2. பவன்குமார் த/பெ.சீனிவாசன் வயது31 நேரம்.12.09 P.M.

முதன்மை விசாரணை.

நான் தற்போது ஆம்பூர் இந்தியன் வங்கிக்கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்றசாட்சி அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகி உள்ளேன். நான் எத்தனை வருடங்களாக இந்தியன் வங்கியில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 2020 ஆம் ஆண்டு பிப்பரவரி மாதத்தில் இருந்து ஆம்பூர் கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி அழைப்பாணையில் கோரப்பட்டுள்ள ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்ய கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் உள்ள புதசாஆ 1 காசோலை எண்.360121 என்ற காசோலை எங்களுடைய கிளையில் இருந்து பிரேம்குமார் என்பவருக்கு வழங்கப்பட்டது. இந்த வங்கிக்கணக்கு என்ன வங்கிக்கணக்கு என்றால் நடப்பு கணக்காகும். இந்த இரு காசோலை எவ்வளவு தொகைக்கு நிரப்பப்பட்டுள்ளது என்றால் தலா ரூ.50,00,000திற்கு நிரப்பப்பட்டுள்ளது. அந்த இரு காசோலை எந்த காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் கரூர் வைசியா வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டு எங்கள் வங்கியால் போதிய பணம் இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்டுள்ளது. இன்றைய தேதிவரை எதிரி பிரேம்குமார் பெயரில் அந்த வங்கிக்கணக்கு இன்யை தேதிவரை நடைமுறையில் உள்ளதா என்றால் இன்றைய தேதி வரை நடைமுறையில் உள்ளது. இன்றைய தேதி வரை மேற்படி காசோலை தொலைந்து விட்டதாகவும், திருடுபோனதாகவும் எங்கள் வங்கியில் புகார் தெரிவித்துள்ளாரா என்றால் அவ்வாறு புகார் எதுவும் தெரிவிக்கவில்லை.

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில்லாதினால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கும் படி எதிரி கேட்டதினால் இச்சாட்சி விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

நேரம்.12.14

சாட்சி கையொப்பம்.

(ஒம்.) பவன்குமார்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) M.Kalimuthuvel,
Judicial Magistrate, Vaniyambadi.